செய்தி வெளியீடு எண்– 828 நாள்–27.9.2010

# மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சீனா, தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு அரசு முறை சுற்றுப்பயணம்

* * * * * * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சீனா, தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு 6 நாட்கள் அரசு முறை சுற்றுப்பயணமாக, இன்று (27.9.2010) புறப்பட்டுச் சென்றார்.

இச்சுற்றுப்பயணத்தின் போது, தென் கொரியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்து தொழில் முதலீட்டை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்காகவும், அந்நாடுகளில் தொழில் தொடங்கியுள்ள பிற நாட்டு நிறுவனங்களை தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வருமாறு அழைத்திடவும், சீனாவில் ஷாங்காய் மாநாகரில் நடைபெறும் உலக வர்த்தக பொருட்காட்சியில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பல்வேறு நாடுகள் அமைத்துள்ள அரங்குகளை பார்வையிட்டு, தொழில் மேம்பாட்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளை பார்வையிடுகிறார்.

மேலும், சீனாவில் பெய்ஜிங், ஷாங்காய் ஆகிய பெருநகரங்கள், தென் கொரியாவில் சியோல் பெருநகரம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள நகர்புற மேம்பாட்டுப் பணிகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை பார்வையிடுகிறார். ஷாங்காயில் நடைபெறும் நிகழ்ச்சியில் தமிழ்நாட்டு தொழில் நிறுவனமான லட்சுமி மிஷின் ஒர்க்ஸ், சீனாவில் தொடங்கியுள்ள புதிய ஜவுளி இயந்திர உற்பத்தி தொழிற்சாலையில், முதலாவதாக தயாரிக்கப்பட்ட ஜவுளி இயந்திரத்தை, சீன நிறுவனத்திற்கு வழங்குகிறார். மேலும் சாம்சங், ஹுண்டாய், நோக்கியா, பாக்ஸ்கான் போன்ற நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகளுடன் இப்பயணத்தின் போது ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

இவைத்தவிர ஷாங்காய், சியோல் மாநகரங்களில் ஓடுகின்ற நதிகளில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு மற்றும் அழகுபடுத்தும் பணிகளை பார்வையிட்டு, அங்கு பயன்படுத்தப்படும் திட்டங்களை, கூவம் நதி சீரமைப்பிற்கு பயன்படுத்துதல் குறித்து ஆலோசனை செய்யவுள்ளார்.

இச்சுற்றுப்பயணத்தில் தொழில்துறை முதன்மை செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதன்மைச்செயலாளர் திரு.கே.தீனபந்து ஆகியோர் உடன் சென்றுள்ளனர்.

* * * * * * * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.